மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

முன்னிலை: திரு.என்.ஞானசம்பந்தம், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, பழனி.

2022 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10 ம் நாள் திங்கள்கிழமை

அசல் வழக்கு எண்.120/2021

--------

பவித்ரா .. வாதி

/எதிர்/

1.சுப்பிரமணியன்,
2.தங்கமணி,
3.சரவணக்குமார் .. பிரதிவாதிகள்

இவ்வழக்கானது இதுநாள் வரையிலும் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையின்கீழ் இருந்து வந்தும், என் முன்பாக வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.ராஜேந்திரபாபு அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் சி.செல்வராஜ் மற்றும் சி.நாகராஜன் ஆகியோர் முன்னிலையாகியும், இவ்வழக்கானது விசாரணைக்காக பட்டியலிடப்பட்டு, இன்று விசாரணைக்கு வந்தபோது, வாதி அழைக்கப்பட்டு ஆஜராகாததாலும், வாதி தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாததாலும், இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

தீர்ப்புரை

தாவா சொத்து வாதிக்கு தனித்து பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யும்படி கோரியும், அதன் தொடர்பரிகாரமாக தாவா சொத்தை வாதி அமைதியாக அனுபவிப்பதை பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ எவ்வகையிலும் இடையூறுகள் செய்யக்கூடாதென நிலைக்கால உறுத்துக்கட்டளை பிறப்பிக்கும்படி கோரியும், இவ்வழக்கின் செலவு தொகையை வாதிக்கு, பிரதிவாதிகளை செலுத்திவைக்க உத்தரவிடும்படி கோரியும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கானது விசாரணைக்காக பட்டியலிடப்பட்டு, இன்று விசாரணைக்கு வந்தபோது, வாதி அழைக்கப்பட்டு ஆஜராகவில்லை. வாதி தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லை. எனவே, இவ்வழக்கானது வாதி தவறுகைக்காக பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த தீர்ப்புரை இன்று 10.10.2022 ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N GNANASAMBANDAM

Digitally signed by N GNANASAMBANDAM
Date: 2022.10.14 16:50:31 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.